# ஜோன் டியூவியின் கல்விச் சிந்தனைக்கும் விபுலானந்தரின் கல்விச் சிந்தனைக்குமிடையிலான ஓர் ஒப்பீட்டாய்வு

K.Kanesarajah
drkanesraj@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

ஒப்பீட்டு நோக்கும் பண்பு சிந்தனை வரலாற்றில் மிகவும் முக்கியமான பண்பாக வளர்ச்சியடைந்துள்ளது. இரண்டு சிந்தனைகளை ஒப்பீட்டு நோக்கி அதனை ஆராயும் பண்பை ஒப்பீட்டுச்சிந்னையெனலாம். கல்வி எனும் சொல் ஆழமான அர்த்தத்தினைக் கொண்டுள்ளது. இது கல்லுதல், கற்றல் எனப் பொருள் கொள்ள முடியும். இதற்கு ‘‘உள்ளே இருப்பதனை அகழ்ந்து வெளிக் கொணர்தல்’’ என்ற அர்த்தமும் காணப்படுகின்றது. அதாவது ‘குழந்தைகளின் உள்ளே இருக்கும் அறிவாற்றலை மலரச் செய்தல் கல்வியாகும்.’ கல்வி என்றால் என்ன?, கல்வி கோட்பாடுகள் யாவை?, எத்தகைய கல்விக் கோட்பாடு சிறந்தது? போன்றவை தொடப்பான விசாரனையை மேற்கொள்வதையே கல்வித் தத்துவமெனலாம். கல்வி என்பதற்கு வரைவிலக்கணம் கூறுவது மிக இலகுவானதல்ல. மேலைத்தேய சிந்தனையில் சோக்கிரட்டிஸ் தொடக்கம் ஜோன் டியூவரை பல கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டன. அதேபோல் கீழைத்தேய சிந்தனையில் யக்ஞுவல்கியர் தொடக்கம் விபுலானந்தர் வரையான சிந்தனைகள் முக்கியம் பெறுகின்றன. இத்தகைய கோட்பாடுகளில் ஜோன் டியூவியினதும், சுவாமி விபுலானந்தரினதும் கல்விச் சிந்தனைகளை ஒப்பிட்டு ஆராய்வதாக இவ் ஆய்வு அமைகிறது. இவ்வாய்வில் இவர்கள் இருவரும் வேறுபாடான கருத்தினைக் கொண்டுள்ளார்கள் என்ற தெளிவான விளக்கம் முன்வைக்கப்படுகின்றது. இவ்வாய்வினைச் சரியான முறையில் மேற்கொள்வதற்கு பல் வேறுபட்ட ஆய்வு முறையியல்கள் பயன்படுத்தப்படுகின்றன. கல்விக் கோட்பாடுகளின் தொடர்பினை விளக்குவதற்கு ஒப்பியல் ஆய்வு முறை, விபரண முறையியல், விபரிப்பு முறையியல் என்பன பயன்படுத்தப்படுவதோடு இவ்வாய்வுக்குரிய தரவுகளாக. இது தொடர்பான நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், என்பனவற்றிலிருந்து பெறப்பட்டு இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது

பிரதான சொற்கள் : தத்துவம், கல்வி, பகுப்பாய்வு, பயன்பாட்டுவாதம், அறம், ஆத்மீகம்.

**ஆய்வு அறிமுகம்:**

Education என்ற ஆங்கிலச் சொல் Educare என்ற லத்தின் சொல்லிருந்து தோற்றம் பெற்றது. கல்வி என்பது மனிதனுள் உள்ளமைந்து கிடக்கும் பல்வேறு ஆற்றல்களையும், திறன்களையும் வெளிக் கொணர உதவும் செயல்முறையாகும் (To bring out). கல்வி எனும் சொல்லுக்கு தோண்டுதல் எனும் கருத்தை ஏற்கும் நாம் அதனை கற்றல் எனும் சொல்லுடன் இணைத்துப் பொருள் கொள்ள வேண்டும். கல்வித் தத்துவம் என்பது கல்வி எண்ணக்கருக்களையும், சொற்களையும், கோட்பாடுகளையும் பகுப்பாய்வு மூலம் விவரணப்படுத்துவதற்கும், அது தொடர்பான பகுப்பாய்வை மேற்கொள்வதற்கான பயிற்சியையும், பரிச்சியத்தையும் பெற்றுக் கொண்ட இடத்து அச் சொற்களிலும் எண்ணங்களிலும் புறத்தே தோன்றும் அர்த்தத்தை விட ஆழ்ந்த அர்த்தம் புதைந்துள்ளமையைக் காணமுடிகின்றது. கல்வித் தத்துவத்தில் பல கோட்பாட்டாளர்கள் கல்வி எவ்வாறு அமைய வேண்டும் என்பதுபற்றி கூறியுள்ளார்கள

கிரேக்க அறிஞர் பிளேட்டோ மிகச் சிறந்த தத்துவஞானி. அவரின் சிந்தனைகள் பல்பரிணாமங் கொண்டவை. மிகச் சிறந்த கல்விக் கொள்கைகளை அவரின் கோட்பாடுகளில் கண்டு கொள்ளலாம். குறிப்பாக அவரது கருத்தியல் சார் கல்விச் சிந்தனைகள் நவீன கல்வியல் கோட்பாடுகளுடன் மிக நெருக்கங் கொண்டவை. இது போல் ரூஷோ முன்வைத்த கோட்பாடு கல்வியியலில் முக்கிய இடத்தினைப் பெறுகின்றன. கல்வித் தத்துவம் என்பது கல்வி தொடர்பான எண்ணக்கருக்களையும், கோட்பாடுகளையும் பகுப்பாய்வு அல்லது விசாரணை செய்வதாகும். இவ் விசாரணைமூலம் அதன் ஆழ்ந்த அர்த்தம் என்ன என்பதை தெளிவுபடுத்த முடியும்.

**கல்வி** : கல்விபற்றிய சிந்தனையாளர்களது கருத்துக்களை நோக்கும் போது, சோக்கிரட்டீஸ்: " தன்னைப்பற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான அறிவை வழங்கும் செயன்முறையே கல்வியாகுமெனவிபரித்தார்" பிளேட்டோ நல்ல மனிதர்கள் உருவாவது மட்டுமல்லாது அவர்கள் நல்ல முறையிற் செயலாற்றவும் கல்வி உதவுகிறது. ஜோன் டூயி: கல்வி வாழும் செயன்முறையே தவிர எதிர்காலத்தில் வாழ்க்கைக்கு ஆயத்தமாக்குவதென்பது இவரின் கருத்தாகும். அல்பிரட் லைட்ஹெட்: கல்வி என்பது அறிவைச் செயன்முறையாக பயன்படுத்தும் கலையைக் கைப்பற்றிக் கொள்வதாகும். பேர்ட்ரன்ட் ரஸல்: தனியாள் விருத்திக்கு சந்தர்ப்பங்களை வழங்கி தடைகளை விலக்கி கலாச்சார அருங்கொடைகளை ஒப்படைத்து சமூகத்துக்கு பயனுள்ள தனியாளை உருவாக்கும் செயன்முறையாக விளக்கியுள்ளார். ஆங்கில கவிவாணர் வில்லியம் வேட்ஸ்வர்த் "மனிதத்தன்மையினை மனிதன் பெற உறுதுணையாக அமைவது கல்வி" என்று வரையறுக்கின்றார். ஆர்.எல்.பீட்டஸ் கல்வியின் மூலம் ஆழமான அறிவையும் விளக்கத்தையும் பெற்றுக்கொள்ளலாம் என்கின்றார். மகாத்மகாந்தி: பிள்ளையிடமும் வளர்ந்தோரிடமும் உடல், உள்ளம், ஆன்மா என்ற வகையில் உயர் நிலைகளை வெளிக்கொண்டு வருதல் கல்வி என்றார். எஸ். ராதாகிருஷ்னன்: "தத்துவம் வாழ்க்கைக்கு வழிகாட்டுவதுடன் வாழ்க்கைக்குரிய திட்டமுறைகளையும் பெற்றுக்கொடுக்கிறது" என்றார்.ரவீந்திரநாத் தாகூர் கல்வி என்பது சமாதானத்தை விருத்தி செய்யும், தெய்வத்தினதும் உலகத்தினதும் மனிதனினதும் ஐக்கியத்தை போஷிக்கும் செயன்முறையாகும். ஜிடு கிருஷ்ணமூர்த்தி: கல்வி என்பதன் உண்மையான பொருள் சுய விளக்கம் பெற்றுக்கொள்வதே என்றார். எமில் டர்ஹய்ம்: கல்வி என்பது சமூகவாழ்க்கைக்கு ஆயத்தமாகின்ற ஒரு கூட்டத்தினருக்காக வளர்ந்தோரால் நடாத்தப்படும் செயன்முறையாகும்.

**தத்துவமும் கல்வியும்** :

தத்துவத்திற்கும் கல்விக்கும் இடையில் ஓர் நெருங்கிய தொடர்புகாணப்படுகின்றது. டி. ஆர். ஓகொணர்: "கல்வித் தத்துவம் என்பது கல்வி பயிலும் மாணவர்கள் கவனம் செலுத்த வேண்டிய முக்கியமான தத்துவப் பிரச்சினைகளின் தொகுதியாகும்" என்றார். எல்.ஏ.றீட் "கல்வித் தத்துவம் என்பது கல்விப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தத்துவ நுட்பமுறைகளைப் பயன்படுத்தலும் குறிப்பிட்ட தத்துவச் சிந்தனைக்கும் கல்விக்கும் இடையிலுள்ள தொடர்பினைத் தீர்மானித்தலுமாகுமென்றார்." ஜேம்ஸ் ரொஸ்: " தத்துவமும் கல்வியும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களை ஒத்தன. தத்துவம், ஆழ்ந்த சிந்தனையின் பக்கம் சார்வதோடு கல்வி, செயற்பாட்டின் பக்கம் சார்கிறது" என்றார். ஜே.எஸ்.புரூனர்: கல்விக்கும் தத்துவத்துக்கும் இடையிலான தொடர்பை இவர் "ஒவ்வொரு கல்வி முறையும் யாதேனும் வாழ்க்கை கண்ணோட்டத்தின் அடிப்படையிலே ஒழுங்கமைகின்றது" என்றார். ரொபர் ரஸ்க்: "கல்வியியலாளர்கள் ஒவ்வருவரும் தத்துவவியலாளர்களாக இருத்தல் வேண்டும்" என்றார். இவ்வாறாக கல்வித் தத்துவம் பற்றிய கருத்துக்கள் காணப்படுகிறது.

**ஆய்வின் நோக்கங்கள்:**

அ. ஜோன் டியூவியின் கல்விக் கோட்பாடுகளை இனங்காணல்.

ஆ. சுவாமி விபுலானந்தரில் வெளிப்படும் கல்விக் கோட்பாடுகளை அடையாளப்படுத்தல்.

இ. ஜோன் டியூவியின மற்றும் சுவாமி விபுலானந்தரின் கொள்கைகளில் வெளிப்படும் கல்விச் சிந்தனைகளை அடையாளங்காணல்.

**ஆய்வுப்பிரச்சினை :**

கருத்துக் கொள்கையும், இயற்கை வாதமும் தமது தளத்திற்கப்பால் கல்விச் சிந்தனைகளையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

**ஆய்வுக்கருதுகோள் :**

ஜோன் டியூவியின கல்விச்சிந்தனையானது சுவாமி விபுலானந்தரில சிந்தனையிலிருந்து மாறுபாடாக அமைந்தள்ளது.

**.ஆய்வு முறையியல் :**

பிளேட்டோ மற்றும் ரூஷோவின் கொள்கைகளில் ஒருபடித்தான தன்மைகளில் வெளிப்படும் கல்விச் சிந்தனைகளை ஆராய ஒப்பிட்டாய்வு பயன்படுத்தப்படுகின்றது. இதற்கமைய பிரதான தரவுகளாக பிளேட்டோவினதும் ரூஷோவினது முறையே கருத்துக் கொள்கை இயற்கைவாதம், தொடர்பாக வெளிவந்த நூல்கள் அமைகின்றன. இவ்விரு அறிஞர்கள் மற்றும் இயற்கைவாதம், கருத்துக் கொள்கை தொடர்பாக எழுதப்பட்ட ஆய்வு நூல்கள், கட்டுரைகள் என்பன இரண்டாம் நிலைத் தரவுகளாக அமைகின்றன.

**இலக்கிய மீளாய்வு :**

ஆர்.எஸ்.பீட்டஸ் என்பவர் தனது Ethics and Education என்ற நூலில் அவர் கூறும் போது கல்வி பயிலும் மாணவர்களின் பிரச்சினைகள் என்ன என்பதை விளங்கிக் கொள்வதற்கு இத்தறை உதவுகின்றது என்றார் மேலும் எல்.ஏ. றீட் Philosophical Analysis and Education என்ற தனது நூலில் கல்வித்தத்துவம் என்பது கல்விப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தத்துவ நுட்பங்களைப்பயன்படுத்தலும் குறிப்பிட்ட தத்துவச் சிந்தனைக்கும் கல்விக்கும் இடையேயுள்ள தொடர்பினைத் தீர்மானித்தலுமாகும். மேலும் றொபின் பெரோ என்பவர் Moral Philosophy for Education என்ற நூலில் கல்வித் தத்துவத்தின் அடிப்படைச் செயலாவது கல்விக்குப் பொருத்தமான எண்ணக்கருக்களையும் கருத்துக்களையும் பகுத்தாய்தலாகும் என்று கூறுகின்றார். ஆர்.எஸ்.பீட்டஸ் என்பவர் தனது Education Theory and Foundation Disciplines என்ற நூலில் கல்வித்தத்துவம் கல்விக்கோட்பாட்டின் ஒரு பிரிவாகும் என்றார். எஸ் சந்தானம் தனது “கல்விக் கோட்பாடுகளும் தத்துவங்களும்” என்ற நூலில் கல்விக்கோட்பாடு பற்றி விளக்குகிறார். மா.செல்வராஜா. (2009), கல்வியியல் அடிப்படை எண்ணக்கருக்கள், என்ற நூலில் கல்வி பற்றியும் கல்விக் கோட்பாடுகள் பற்றியும் ஒப்பீட்டுரீதியாக விளக்கியுள்ளார் .

1. **ஆய்வு தொடர்பான விவாதங்களும் ஒப்பீடுகளும்**

**பயனலவாதம் (Paragmatism )**

தமது வாழ்க்கைக்கு உதவத்தக்க புதிய மதிப்புக்களை மாணாக்கன் உருவாக்கிக்கொள்ள உதவுவது கல்வியின் நோக்கமாக அமைய வேண்டும் என்பது பயனலக் கொள்கையின் கோட்பாடாகும். கல்விச் செயல்கள் மனிதனது தேவைகளை நிறைவு செய்யகூடியனவாகவே அமைதல் வேண்டும். தத்துவத்தினின்றும் கல்விக் கோட்பாடுகள் எழுகின்றன என்பதை என்பதைக்காட்டிலும் பயனுள்ள கல்விக் கோட்பாடுகளின்றும் தத்துவக் கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன என்பது பொருத்தமானதாகும். என்று பயனளவைக் கொள்கையினர் கருதுகின்றனர். கல்விக் கருத்துக்களின் பரவலான பொதுவான அடிப்படைகளின் தொகுப்பே தத்துவமாகும் என்று ஜோன் டூயி கூறுகிறார். குழந்தையின் நோக்கங்கள், கவர்ச்சிகள், ஆர்வங்கள் ஆகியன அதன் சூழ்நிலையில் நிறைவுறும் வகையில் இவற்றை திசைப்படுத்துவது கல்விச் செயல்முறையின் மையப் பணியாகும். குழந்தைகளுக்கு எவ்வெவற்றைக் கற்க வேண்டுமோ அவ்வவற்றை அதற்கு கற்பிப்பது மட்டும்உண்மைக் கல்வி ஆகமாட்டாது. புத்தகங்களினின்றும் பெறும் அறிவு உண்மை அறிவன்று ஏன் எனின் புத்தகங்களினின்று பெறப்படும் கருத்துக்கள் உயிருள்ளவையல்ல. அவை இறந்து போன கருத்துக்களேயாம்.

**ஜோன் டூயின் கல்வி தொடர்பான கருத்துக்கள**

கல்வி என்பது அனுபவங்களை மீண்டும் மீண்டும் புனரமைக்கும் தொடர்ச்சியானதொரு கருமத்தொடராகும். கல்வி குறித்த நோக்கங்களோ, குறிக்கோளோ, இலட்சியங்களோ இருக்க முடியாது. கல்வி என்பது வாழ்க்கைக்கு தயாராதல் அல்ல. மாறாக வாழ்க்கையை வாழ்வதே கல்வியாகும். சரியான கற்றல் என்பது விடயங்களை தேர்ந்தெடுத்தல் அல்ல. மாறாக ஆராய்ச்சியாளராகக் கருமமாற்ற இடமளிப்பதே சரியான கற்றலாகும். கல்வி பொருளுள்ளதாக அமைய வேண்டுமெனில் பாடசாலை நடவடிக்கைகளுக்கும் சமூக வாழ்க்கை அனுபவங்களுக்குமிடையே நற்றொடர் காணப்பட வேண்டும். கல்வி பிள்ளையை மையமாக கொண்டிருத்தல் வேண்டும். வழங்கப்படும் கல்வி பிள்ளையின் வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் இயைபானதாக அமைதல் வேண்டும். பிள்ளையின் தாய் மொழியிலே கல்வி புகட்டல் வேண்டும். கல்வியைச் செயற்பாடுகள் மூலம் வழங்க வேண்டும். கலைத்திட்டம் தயாரிக்கையில் சமூக அனுபவங்களுக்கு பிரதான இடம் வழங்குதல் வேண்டும். பிரச்சினையைத் தீர்க்கும் முறையே பொருத்தமான கற்பித்தல் முறையாகும்.

**ஆத்மீகவாதம் :**

கருத்துவாதமும் ஆத்மிகவாதமும் ஒன்றோடொன்று தொடர்புடையவையாகும். பௌதீகத்திற்கு அப்பாற் பட்ட விடயங்களை ஏற்றுக்கொள்கின்ற வாதமாக இவைகள் காணப்படுகின்றது. பிறந்தது முதல் இறக்கும் வரைக்குமான அனைத்து விடயங்களையும் நிர்ணயிக்கும் சக்தியாக பிரபஞ்ஞுத்திற்கு அப்பாற்பட்ட சக்தி காணப்படுகின்றது என கருத்துவாதம் சுட்டிக்காட்டுகின்றது. இந்த விடயத்தில் உடன்பாடு கொண்டவர்களாக கருத்துவாதிகள் காணப்பட்டனர். விபுலாநந்தரது சிந்தனைகளும் கருத்துக்களும் இதற்கு சார்பாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. கருத்துவாதமும் சடவாதமும் ஒன்றுக்கொண்று முரனானவையாகும்.

**விபுலாநந்தரது கல்விச் சிந்தனைகள் :**

சுவாமியின் கல்விச் சிந்தனைகளுள், உலகின் தலைசிறந்த கல்விச் சிந்தனையாளர்களதும் உளவியலறிஞர்களதும் சீரிய கருத்துக்கள் பல பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன. சமயங்கள் யாவும் ஒருவனாக இருக்கும் இறைவனையே தேடுகின்றன. இறைவனின் பாதமலரை அடைவதே வாழ்க்கையின் இறுதி இலக்கு. இவ்விலக்கினை அடைவதற்கேற்ற ஞான ஒளியினை ஒருவரது அகத்தில் பிரகாசிக்கச் செய்வதையே கல்வி நோக்காகக் கொள்ள வேண்டும் என்றார். 1933இல் குமரன் பத்திரிகையில் எழுதிய 'பயனற்ற கல்வி', 1934 இல் எழுதிய வித்தியா சமாச்சாரப் பத்திரிகையில் எழுதிய 'பயனுள்ள கல்வி' 1938 இல் எழுதிய 'இலங்கை புதிய கல்வித் திட்டத்திற்கு ஆதரவு' ஆகிய கட்டுரைகள் அவரது கல்வியியற் சிந்தனைகளை வெளிப்படுத்தக்கூடிய படைப்புகளாகும்.

கல்வி முறை எவ்வாறு அமைய வேண்டுமென அடிகளார் கூறும் போது, "பிறர் உதவியை நாடி எழுந்து உட்காருபவன் நொண்டி, சிறுவயதிலே எழுதவும் படிக்கவும் தெரிய வேண்டும், அதனுடன் நல்லொழுக்கமும் தெய்வபக்தியும் ஊன்ற வேண்டும். இதற்கு குருகுல கலாசாலையே அவசியமாகும். சிறுவயதிலே இம்மாதிரி கல்வி கற்ற பிறகு தன் குலத் தொழிலோ, அல்லது சிறுவனுக்கு எத்தொழில் கற்க வேண்டுமென்று ஆர்வமுண்டாகின்றதோ அதனைப் போதிக்க வேண்டும், அப்படிச் செய்தால் மாணவப்பருவம் கழிந்ததும் நம் சிறுவர்கள் குமாஸ்தா வேலையைத் தவிர வேறொன்றுமில்லையே எனவும் பெற்றோர், 'எத்தனை பணம் செலவழித்தோம், ஏழையானோம் எண்சாண் உடம்பை வளர்க்க வழியில்லாது நாமும் நம் மக்களும் தவிக்கின்றோம்' எனவும் கூறார்" என அடிகளார் உரைக்கின்றார்.

கலையும் அறிவியலும் இணைந்து நடைமுறையில் பயன்தரக் கூடிய வகையில் கல்வியமைப்பினை அடிகளார் பெரிதும் விரும்பினார். அத்தோடு கலை, அறிவியல், மெய்ஞானம் ஆகிய மூன்றும் ஒருங்கிணையும் கல்வியே முழுமையான கல்வியாகும் என்னும் கருத்து அடிகளாரிடம் மேலோங்கியிருந்தது. மனித வாழ்வுக்கு தேவையான கல்விப் பரப்புப் பற்றியும் அதனைப் பயில்வதற்கான காலவரையறை பற்றியும் அடிகளார் எடுத்துக் கூறியுள்ளதோடு எல்லாக் கலை ஞானங்களும் மனித வாழ்வு மேம்பாடடைய முக்கியமானது என்றார். மாணவர்

மனதில் இலகுவில் பதியத்தக்கதாக ஆசிரியர்களின் கற்பித்தல் அமைய வேண்டுமெனக் கூறினார். கல்வியினுடாக சமநிலை ஆளுமை சமூக நல்லுறவை வளர்ப்பதற்கும் அது அவசியமானது என்றார்.

பொதுவாக சுவாமிகள் ஆன்மீக நெறியுடன் இணைந்த கல்வி, மூடபழக்கவழக்கங்கள் இல்லாது போதல், கல்விக்கு அடிப்படை புலன் அடக்கமும் தியானமும், கல்வியில் அனைவருக்கும் சம வாய்ப்பு, தீண்டாமை ஒழிப்பு, தாய் மொழிக் கல்வி, தேச நலன் பேணக்கூடிய கல்வி, மத வேறுபாடுகளை கருத்தில் கொள்ளாது மக்கள் ஐக்கியமாதல் போன்ற விடயங்களுக்கு அவர் முக்கியத்துவம் கொடுத்திருந்தார்.

**ஒப்பீட்டு நோக்கு**

மேலைத்தேய தத்துவ வரலாற்றில் இருபதாம் நூற்றாண்ட்டில் பிரபல்யமான அமெரிக்க சிந்தனையாளராக ஜோன் டியுவி (1859 – 1952) காணப்பட்டார். இளமைப்பருவத்தை இங்கிலாந்தில் கழித்தார். இனமையில் இருந்தே ஆராய்ச்சியில் ஈடுபாடு காட்டினார். அத்தோடு ஒழுக்கக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தார். அதேபோல் கீழைத்தேய கல்வித்தத்துவ வரலாற்றில் சுவாமி விபுலானந்தர் (1892 – 1947) முக்கியமானவர். இவர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் காரைதீவில் பிறந்தார். இளமையிலிருந்தே ஆராய்ச்சித் திறமையுடையவராகவும் கருத்தியல்சார் சிந்தனையாளராகக் காணப்பட்டார்.

விபுலானந்தர் ஆத்மீகம் சார்ந்த அடிப்படையில் கருத்துக்களை வெளிப்படுத்தினார். ஆனால் ஜோன் டியுவி முன்னமே தீர்மானிக்கப்பட்ட எந்த உண்மையும் இல்லை எனக்கூற விபுலானந்தர் மனித இனத்திற்கு சேவை செய்வதுதான் உயரிய இலக்கு எனச் சுட்டிக்காட்டுகின்றார்.

ஜோன் டியுவி கல்வி என்பது சமூக முன்னேற்றத்திற்கும் மறுசீரமைப்பிற்குமான ஒரு கருவியாகும் எனக்கூறினார். விபுலானந்தரைப் பொறுத்தமட்டில் கல்வி என்பது ஆத்மீகத்தையும், கலாசாரத்தையும் வளர்க்கும் கருவியாக சுட்டிக்காட்டும் இவர் விழுப்பத்தைத் தருகின்ற ஒழுக்கத்தை விருத்தி செய்யும் கல்வியே கல்வி, ஏனைய கல்வி கல்வி எனப்பட மாட்டாது என்றார். ஜோன் டியுவி சமயத்திற்கு முக்கியத்துவம் வழங்கவில்லை, ஆனால் வழுமியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தார். இவ்விழுமியங்களும் மாறுபடக்கூடியவை என்றார். ஆனால் விபுலானந்தர், சமயக்கல்வி விழுமியங்களின் தொகுப்பாகவும் அனுபவங்களின் ஒருங்கிணைப்பாகவும் காணப்படுகின்றது என்றார்.

வழங்கப்பட வேண்டும் உடன்பாடு காட்டினார்கள். அதேபோல் செயல்சார்ந்த அம்சங்கள் அல்லத பயன்சார்ந்த அம்சங்களில் இருவரும் அக்கறை கொண்டிருந்தார்கள். மேலும் இருவரும் சூழல் சார்ந்த அல்லது இயற்கை சார்ந்த அம்சங்களிலிருந்து அறிவினைப் பெறுவது சிறந்தது என்று சுட்டிக்காட்டினார்கள். ஆசிரியர்கள் எப்போதும் மாணவர்களிடத்தில் தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்புபவர்களாகவும் வழிப்படுத்துபவர்களாகவும் இருக்க வேண்டும் என வலியுறுத்தினார்கள்.

இருவரும் கல்விப் போதனை செய்பவர்கள் தேடல் நாட்டம் அல்லது இயல்பூக்கம் கொண்டவர்களாகவும் உளவியல்சார் அறிவு கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும் என்றார்கள். அப்பொழுதுதான் தங்களது மாணவர்களை. இருவரும் இருவரும் கலைத்திட்டத்தில் விஞ்ஞான, தொழிநுட்ப பாடங்களையும் அழகியல், ஒழுக்கவியல் பாடங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தார்கள். மேலும் உடற்கல்வி, உடல்நலக்கல்வி, கணிதம், விஞ்ஞானம் போன்றவற்றை விபுலானந்தர் பெருமளவில் விரும்பினார்.

**முடிவுரை**

கல்விச்சிந்தனை வரலாற்றில் ஜோன் டியுவியும் விபுலானந்தரும் பல விடயங்களில் ஒற்றுமையுள்ளவர்களாகக் காணப்பட்ட போதிலும் சில விடயங்களில் வேறுபட்டுக் காணப்படுகின்றார்கள். பயன்பாட்டுவாத நோக்கில் நோக்கும்போது பயன் கருதாத விடயங்களுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அதேநேரம் மாணவர்களின் பயன்பாடு கருதி எல்லா விடயங்களும் அமைய வேண்டும் என ஜோன் டியுவி வலியுருத்தினார். பயன் என்பது இவரைப்பொருத்தவரையில் செயற்பாடு சார்ந்த பயன்பாடாகும். ஆனால் விபுலானந்தரது

சிந்தனையில் சமயம் சார்ந்த சிந்தனைகள் அதிகமாக இருந்ததன் காரணமாக ஆத்மீகம் சார்ந்த பயன்பாட்டிற்கு முக்கியத்துவம் வழங்கினார். அதேநேரம் இருவரும் மாணவர் மையக்கல்விக்கும், பிரபஞ்சம் சார்ந்த கல்விக்கும் முக்கியத்துவம் வழங்கியுள்ளதை அவதானிக்க முடிந்துள்ளது. அதேநேரம் எண்ணும் எழுத்தும் கல்வியின் அடிப்படைகள் என சுட்டிக்காட்டுவது சிறப்பான அம்சமாகும்.

**உசாத்துணை நூற்பட்டியல்**


1. சந்திரசேகரம் .எஸ். (2000), **கல்வித் தத்துவம், குமரன் புத்தக இல்லம்**, கொழும்பு.
2. சந்தானம்.எஸ். (1993), **கல்விக் கோட்பாடுகளும் கல்வித்தத்துவங்களும்**, சென்னை
3. கதிரவேலுப்பிள்ளை, சி., (1958), **மேல்நாட்டுத் தரிசன வரலாற்றின் சுருக்கம்**, யாழ்பாணம்.
4. ஜெயராசா.சபா,(2008), **கல்விக் கோட்பாடுகளும் மாற்றுச்சிந்தனைகளும்**, சேமமடு பதிப்பகம், கொழும்பு.
5. செல்வராஜா.மா (2009), **கல்வியியல் அடிப்படை எண்ணக்கருக்கள்**, எவகிறின் அச்சகம்,மட்டக்களப்பு
6. மன்சூர். எம். (2015), **கல்வித் தத்துவங்கள்**, செலஸ்சன் அச்சகம், அக்கரைப்பற்று
7. Masih.Y., (1994) , **A Critical History Of Western Philosophy** .Delhi.
8. Vesey , G., (1987) , **Philosophers- Ancient And Medieval**, New York.
9. சற்குணம்., எம், (1969), **அடிகளார் படிவமலர்,** சுதந்திரன் அச்சக வெளியீடு, கொழும்பு.
10. நூற்றாண்டு நினைவுக் கட்டுரைத் தொகுப்பு, (1992) **தமிழறிஞர் விபுலாநந்தர் வாழ்வும் பணிகளும்**, இந்துசமயகலாசார வெளியீடு, கொழும்பு